பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

15 12 2025 MONDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மக்கள் சேவையில் ஈடுபடும் அதிகாரிகள் நேர்மையாகவும், பொறுப்புணர்வுடனும் பணியாற்றுவது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாடுகள் பயணமாக இன்று ஜோர்டான் புறப்பட்டுச் செல்கிறார்.

3. பிஜேபியின் தேசிய செயல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. Nitin Nabin-க்கு பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

4. காஸாவில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில், ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டார்.

5. 18 வயதுக்குபட்டோருக்கான ஆரஞ்ச் Bowl Tennis போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் ரேவதி – செர்பியாவின் Anastasija Cvetkovic இணை பட்டம் வென்றது.

>>>>><<<<<

மக்கள் சேவையில் ஈடுபடும் அதிகாரிகள் பொறுமையைக் கடைபிடித்து நியாயமாகவும், பொறுப்புணர்வுடனும் பணியாற்றுவது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் குடிமைப் பணி பயிற்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அவர், மனிதநேயத்துடன் கூடிய ஆட்சி முறைக்கு பொதுமக்களின் பிரச்சினைகளை கனிவுடன் கேட்டறிவது இன்றியமையாதது என்றார்.

நாட்டின் வளர்ச்சியில் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு சுதந்திரமடைந்தபோது சர்தார் வல்லப்பாய் பட்டேல் சமஸ்தானங்களை ஒன்றிணைத்தது, உலக அளவில் வேறு எங்கும் நடந்திராத பணி என்றும் அவர் கூறினார்.

உரத்த குரலில் பேசுவது விளம்பரத்தை தேடி தந்தாலும், அர்த்தமுள்ள விவாதங்கள்தான் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாடுகள் பயணமாக இன்று ஜோர்டான் புறப்பட்டுச் செல்கிறார்.

ஜோர்டான் மன்னர் அப்துல்லா பின் அல்-ஹுசைன் அழைப்பின் பேரில் செல்லும் அவர், இருதரப்பு ஒத்துழைப்புகள் மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து அவருடன் விவாதிக்க உள்ளார்.

இந்தியா - ஜோர்டான் இடையே தூதரக உறவு ஏற்பட்டதன் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இந்த பயணத்தின்போது இரு நாடுகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புகள் குறித்து ஆராயப்பட உள்ளது.

தமது பயணத்தின் இரண்டாம் கட்டமாக நாளை எத்தியோப்பியா செல்லும் பிரதமர், அந்நாட்டுப் பிரதமர் டாக்டர் Abiy Ahmed Ali உள்ளிட்ட தலைவர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

தமது பயணத்தின் நிறைவாக நாளை மறுநாள் ஓமன் செல்லும் அவர், அந்நாட்டு சுல்தான் Haitham Bin Tariq உடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

பிஜேபியின் தேசிய செயல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. Nitin Nabin-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

இளம் அரசியல்வாதியும், தொழிலதிபருமான திரு. நிதின் கட்சிப் பணிகளில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர் என்பதோடு, பிஹாரில் சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை திறம்பட வகித்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் எளிமையானவரான அவர், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் பாடுபடுவார் என்றும் கூறியுள்ளார்.

திரு. Nitin Nabin-ன் உத்வேகம் மற்றும் அர்ப்பணிப்பு வருங்காலத்தில் கட்சியை வலுப்படுத்தும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிஜேபி இளைஞர் அணியில் பீகார் மாநிலத் தலைவர், தேசிய பொதுச்செயலாளர் மற்றும் சத்திஷ்கட் மாநிலத்திற்கான கட்சியின் பொறுப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை திறம்பட வகித்தவர் திரு. Nitin Nabin என்று கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அவரது இந்த நியமனம் தலைமைப் பொறுப்புக்கு தகுதியான மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்டவர்களை தேர்வு செய்யும் பிஜேபியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பீகாரைச் சேர்ந்த ஒருவர் இந்த உயரிய பொறுப்புக்கு நியமிக்கப்பட்டிருப்பது, மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிஜேபியின் செயல் தலைவர் என்ற மிகப் பெரிய பொறுப்பு திரு. நிதின் நபினுக்கு வழங்கப்பட்டிருப்பது அவரது தலைமைப் பண்பு, மக்கள் சேவையில் காட்டி வரும் ஆர்வம் மற்றும் அரசியல் அனுபவத்தை உணர்த்துவதாக தெரிவித்துள்ளார்.

தமிழக பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோரும் திரு. நிதின் நபினுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**>>>>><<<<<**

தொழில்நுட்ப வளர்ச்சி நீதிமன்ற தீர்ப்பு வழங்குவதை விரைவுபடுத்துகிறது என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. Surya Kant தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், கோவிட் பெருந்தொற்று காலத்தில் தொழில்நுட்பம் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது என்று கூறினார்.

எனினும், தொழில்நுட்பங்கள் மனித சக்திக்கு மாற்றாக இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வு காண, சமரச தீர்வு உள்ளிட்ட மாற்று முறைகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் தலைமை நீதிபதி வலியுறுத்தினார்.

>>>>><<<<<

அஸ்ஸாம் மாநிலத்தில் புதிதாக அமைக்கப்பட உள்ள Namrup உரத் தொழிற்சாலை, வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக திகழும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

திப்ருகர் மாவட்டம், Namrup-ல் இதற்கான பணிகளை பார்வையிட்ட பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், தற்போதைய பிரம்மபுத்திரா உர நிறுவன வளாகத்தில் அமைக்கப்படும் புதிய தொழிற்சாலைக்கு வரும் 21ஆம் தேதி பிரதமர் அடிக்கல் நாட்டவிருப்பதாக கூறினார்.

இந்த ஆலையில் அம்மோனியா மற்றும் யூரியா உரங்கள் உற்பத்தி செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாநிலங்களில் வளர்ச்சியை ஏற்படுத்துவது என்ற பிரதமரின் உறுதிப்பாடு, நாட்டின் வேளாண் மற்றும் தொழில்துறை சுயசார்புடன் திகழ்வதற்கு வழிவகுக்கும் என்றும் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

>>>>><<<<<

சத்ரபதி சிவாஜி தேசப் பணியின் அடையாளமாகத் திகழ்ந்தவர் என்று மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

கர்நாடக மாநிலம் பெலகாவி மாவட்டத்திற்குட்பட்ட அத்தானியில் சிவாஜியின் 25 அடி உயர சிலையை திறந்து வைத்துப் பேசிய அவர், இப்பகுதி வீரம், அசைக்க முடியாத துணிச்சல் மற்றும் சுயமரியாதைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது என்றார்.

தக்கானப் பீடபூமியை கொங்கன் மற்றும் கோவா பகுதிகளுடன் இணைக்கும் வழித்தடத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக பெலகாவி உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சத்ரபதி சிவாஜி காட்டிய வழியில் தற்போதைய இந்தியா முன்னோக்கிச் செல்வதாகவும் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>>>>><<<<<

அருணாச்சலப்பிரதேசத்தில் உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது.

இட்டா நகர் மாநகராட்சி, Pasighat நகராட்சி மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகள் மற்றும் கிராம பஞ்சாயத்துகளுக்கான இத்தேர்தலில், 8 லட்சத்து 31 ஆயிரத்து 648 வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்தவுள்ளனர்.

மாவட்ட பஞ்சாயத்து வார்டுகளுக்கான 186 இடங்களில் பிஜேபி வேட்பாளர்கள் 58 வார்டுகளில் ஏற்கனவே போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் கட்சி வேட்பாளர் ஒருவரும் மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

>>>>><<<<<

ரயில்கள் மற்றும் ரயில்வே சொத்துக்களை சேதப்படுத்துவோர் மீது சட்ட ரீதியாக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெற்கு ரயில்வே எச்சரித்துள்ளது.

சென்னையிலிருந்து - திருநெல்வேலி நோக்கிச் சென்ற வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் ரயில் மீது, விருத்தாசலம் அருகே சிறுவர்கள் சிலர் கல்வீசி தாக்கியதில், ரயிலின் 6 பெட்டிகளில் உள்ள கண்ணாடி சேதமடைந்ததாக ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே சட்டப்பிரிவுகள் 153 மற்றும் 154-ன் படி, ரயில்களுக்கு சேதம் ஏற்படுத்துவோர் மற்றும் பயணிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக

செயல்படுவோருக்கு ஐந்தாண்டு சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், ரயில்வே சொத்துக்கள், அரசு சொத்துக்கள் என்பதால் அதனை பாதுகாக்க வேண்டியது அனைவரது கடமை என்று சுட்டிக்காட்டியுள்ள தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங், ரயில் பாதையை ஒட்டியுள்ள பகுதியில் வசிக்கும் மக்கள், தங்களது குழந்தைகளை இதுபோன்ற செயல்களில் ஈடுபடாமல் இருக்கும்படி அறிவுறுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

காஸாவில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில், ஹமாஸ் அமைப்பின் முக்கியத் தலைவரான Raad Saad கொல்லப்பட்டார்.

இதனை உறுதி செய்துள்ள இஸ்ரேல் ராணுவம், அவர் ஹமாஸ் அமைப்பின் ஆயுத உற்பத்திப் பிரிவு தலைவராக செயல்பட்டவர் என்று தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி, ஆயிரத்து 200 பேரின் உயிரிழப்புக்கு காரணமானவர்களில் Raad Saad முக்கியமானவர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, தெற்கு லெபனானில் இஸ்ரேல் படையினர் நடத்திய மற்றொரு தாக்குதலில், ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார்.

>>>>><<<<<

18 வயதுக்குபட்டோருக்கான ஆரஞ்ச் Bowl Tennis போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் ரேவதி – செர்பியாவின் Anastasija Cvetkovic இணை பட்டம் வென்றது.

அமெரிக்காவின் Fort Laurderdale-ல் நேற்று நடைபெற்ற போட்டியில், இந்த இணை ஜமைக்காவின் Alyssa James – அமெரிக்காவின் Annika Penickova இணையை 7-5, 6-1 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தியது.

>>>>>end<<<<<